[16th March 1966

இருப்பதால் டவுனுக்குப் போகக் கஷ்டமாக இருப்பதினால் ஒரு பை பாஸ் ரோடும் சாத்தூரில் இருப்பது போன்று ஒரு பாலமும் போடுவதற்கு உத்தேசமுண்டா?

(பதில் இல்லை)

திரு. ஜே. மாதா கவுடர்: பவானி—கொமாரபாளையம் பாலத்தை அகலப்படுத்துவது பற்றி சொன்னார்கள். பவானிக்கும் கோவைக்கும் போகக் கூடிய ரோட்டிலே, அந்த நாஷனல் ஹைவேஸ் ரோட்டில் அந்தப் பாலம் இருக்கிறது. பக்கத்திற்குப் பக்கத்தில் இருப்பதால் இரண்டு பாலங்களும் ஒட்டு மொத்தமாக எடுக்கப்படுகின்றனவா அல்லது தனித்தனியாக எடுக்கப்படு கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினர் அவர்கள் எந்தப் பாலத்தைக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. வை. சங்கரன்: நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டிலா, இரண்டாவது ஆண்டிலா, மூன்றாவது ஆண்டிலா, நான்காவது ஆண்டிலா, அல்லது ஐந்தாவது ஆண்டிலா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: The approval of the Government of India for the draft Fourth Five-Year Plan for National Highways is still awaited.

MR. SPEAKER: I shall take up the questions relating to Public Health after the Hon. Minister for Health arrives.

பஞ்சாயத்து தலைவர்கள்

*309 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் சமீபத்தில் நடந்த பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல்களின்போது, சிறையில் இருந்தபடி தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) மேற்படி பஞ்சாயத்துக்கள் எவ்வாறு செயலாற்று கின்றன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) இருவர்.

(இ) ஒரு பஞ்சாயத்தின் நிர்வாகம் அதன் துணைத் தலைவராலும், மற்றொன்றின் நிர்வாகம் தலைவரின் பிரதிநிதியாலும் நடத்தப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: சார், இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாக பள்ளிக்கூட வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அந்த மாதிரி தகவல் இல்லை.

16th March 1966]

திரு. ஆ. கு. சுப்பையா : ஒரு பஞ்சாயத்தில் கட்டப்பட்டு வந்த பள்ளிக்கூட வேலை பாதியில் நிறுத்தப்பட்டிருக்கிறது, இவ்விதம் நிறுத்தப்பட்டு மூன்று வருடங்கள் ஆகின்றன. இது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாக எழுதி அனுப்பினல் இதிலுள்ள கால தாமதத்தைப் போக்குவதற்கு முயற்சி செய்யலாம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : In the main answer, the Hon. Minister has stated that in the case of one panchayat, the administration is carried on by the Vice-President and in another panchayat, by a representative of the President. I want to know whether the Panchayats Act provides for such a delegation of power to the Vice-President or a representative of the President, when the President is virtually absent?

THE HON. SRI S. M. A. MAJID : Under the Act, the President can delegate powers to a Vice-President or any Member he desires.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து தலைவர்கள் இல்லாத ஊர்களில் உபதலைவர்களே இந்த வேலை களைப் பார்த்து வரலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லு கிறார்கள். தேர்தலே நடைபெருத பல ஊர்கள் இருக்கின்றனவே, அந்த ஊர்களில் நிர்வாகம் எப்படி நடைபெறும் ?

கனம் சபாநாயகர் : எந்த இடத்தில் என்று சொன்னல் பதில் சொல்ல முடியும்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : குறிப்பிட்டு எந்த இடம் என்று சொன்னல் அதைபற்றி விவரங்களை சொல்ல முடியும்.

திரு. ஆ. கு. சுப்பையா : பஞ்சாயத்துக்களில் தலைவர் தேர்ந் தெடுக்கப்பட்ட பின்னல் தான் உப தலைவர் தேர்ந்தெடுக்கப்பட முடியும். பஞ்சாயத்துத் தலைவரே சிறையில் இருக்கும்போது, எப்படி உப தலைவர் தேர்தல் நடக்கும் என்பதை அறியலாமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பஞ்சாயத்து சட்ட விதிமுறை களுக்கேற்ப அவ்வப்போது பஞ்சாயத்து தேர்தல்கள் நடத்தலாம். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகின்ற விஷயம் இப்போது கோர்ட்டில் இருப்பதால் அங்கு வைஸ் பிரசிடன்ட் இல்லாமல் இருக்கிறது என்பதைக் கனம் அங்கங்கத்தினர் அவர்கள் அறிவார் கள் என்று நம்புகிறேன்.

பஞ்சாயத்து 'யூனியன்'கள்

** 310 கேள்வி—திரு. சா. ராமசாமி :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து கல்வி நிர்வாகத்தை மாற்றியமைக்கும் உத்தேசம் அரசினருக்கு உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.